# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1867/21 - 2014 ජුනි මස 20 වැනි සිකුරාදා - 2014.06.20

*1867/21 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 4/2013*

**(276 ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டம்**

*(276 ஆம் அத்தியாயமான) சட்டக் கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவை,
(கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவைக்காகவும்
அதன் சார்பிலும் கையொப்பமிடப்பட்டது).

கொழும்பு,
2014, மே 07.

விதிகள்

1. சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான விதிகள் அதன் 23 ஆம் விதியின் (2) ஆம் பந்தியில், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(அ) (ii) ஆம், (iii) ஆம் உப்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உப்பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(ii) நுழைவுப் பரீட்சைக்கான பாடங்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) மொழி வினாத்தாள் - சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழி ; அத்துடன்

(ஆ) பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத் தாள் ;

(iii) பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாளுக்கு பரீட்சார்த்தி ஒருவர் ஒன்றில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் விடையளிப்பதற்கு விருப்புத் தெரிவிக்கலாம். பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாளுக்கு அவர் ஒன்றில் சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் விடையளிப்பதற்கு விருப்புத் தெரிவித்தால், அவர் ஆங்கில மொழி வினாத்தாளுக்கு தோற்றுதல் வேண்டும். அவர் பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாளுக்கு ஆங்கில மொழியில் விடையளிப்பதற்கு விருப்புத் தெரிவித்தால், ஒன்றில் சிங்கள மொழி வினாத்தாளிற்கு அல்லது தமிழ் மொழி வினாத்தாளிற்குத் தோற்றுதல் வேண்டும் ;";



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) உட்பந்தி (vii) என்பதை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :-

"(vii) பரீட்சார்த்திகள் நுழைவுப் பரீட்சையில் அவர்களது செயல்திறன் மீதான தகுதியின் ஒழுங்கிலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விப் பேரவையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் ஆன அடிப்படையில் இலங்கைச் சட்டக் கல்லூரிக்கான அனுமதிக்கெனத் தெரிவு செய்யப்படுதல் வேண்டும் :

ஆயின், மேற்சொல்லப்பட்ட இரண்டு வினாத்தாள்களுக்கும் அறுபது சதவீத சராசரியொன்றை விடக் குறைவானதும் அத்துடன் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் அதிகூடிய புள்ளியின் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவானதுமான புள்ளியொன்றைப் பெற்றுள்ளவரான பரீட்சார்த்தி எவரும் அனுமதிக்கெனத் தெரிவு செய்யப்படுதலாகாது;" ;

(இ) (ix) ஆம் (x) ஆம் உட்பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும் :-

"(ix) (அ) மொழி வினாத்தாளிற்கான பாடத்திட்டம் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) ஒரு கட்டுரை - இதன் முக்கிய குறிக்கோள் பரீட்சார்த்தியின் சிந்தனை, கருத்து வெளிப்படுத்துகை மற்றும் ஒழுங்கமைப்பு திறனைப் பரீட்சிப்பதாகும் ;

(ஆ) சுருக்கியெழுதுதல் மற்றும் பொழிப்புரை செய்தல் ;

(இ) சொற்றொடரிலக்கணம், சொல்வளம், ஒத்தபொருட் சொற்கள் மற்றும் எதிர்ப்பொருள் சொற்கள், மறைபொருளுள்ள மற்றும் மொழிநடைப் பயன்பாடு ;

(x) ஒவ்வொரு வினாத்தாளுக்கும் விடையளிப்பதற்குக் குறித்தொதுக்கப்பட்ட நேரம் மூன்று மணித்தியாலங்கள் ஆதல் வேணடும் ; ".

2. மேற்சொல்லப்பட்ட திருத்தங்கள் 2014, சனவரி 1 ஆந் திகதியில் வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7- 178

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.